# போறதீவுப் பற்று பிரதேச சபை

## மட்டக்களப்பு மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 11 இல் சபையின் தலைவரிற்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய போறதீவுப் பற்று பிரதேச சபையானது 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் என்னுடைய அறிக்கையுடன் தொடர்புபட்ட விடயங்களினால் நிதிக் கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு அமைய போறதீவுப் பற்று பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துக்கள் தொடர்பில் மீளமைப்பு ஒதுக்கத்திற்கான ஏற்பாடுகள் கணக்குகளில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(2) ஆம் பிரிவின்படி கணக்காய்வுக் கட்டணங்களிற்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 1,319,050 பெறுமதியான மோட்டார் வாகனம் நிலையான சொத்துக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 2,525,601 பெறுமதியான சொத்துக்கள் இழப்பு சொத்துக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 1,940,010 உடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 2,102,188 ஐ ஒப்பிடலாம்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | இறைகளும் வரிகளும் | 20 | 196 | - |
| (ii) | குத்தகை வாடகைகள் | 516 | 466 | 63 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 300 | 690 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 275 | 301 | 18 |

#### 2.2.2. நீதிமன்ற தண்டப்பணங்கள்

மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 3,011,736 ஆகும்.

### 2.3. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 173,340 பெறுமதியான 2000 பாடவிதானப் புத்தகங்கள் பாடசாலைச் சிறுவர்களிற்கு இடையில் பங்கிடப்பட வேண்டியதுடன் அதில் 1982 புத்தகங்கள் சிறுவர்களிற்கு இடையில் பங்கிடப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயற்பாட்டு / முகாமைத்துவ திறமையீனங்கள்

சபையின் முன்னாள் செயலாளரால் துஸ்பிரயோகம் செய்யப்பட்ட ரூபா 165,284 தொகை நீண்ட காலமாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்